முருகப்பெருமான் துணை

**மகான் கோச்செங்கட் சோழ நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**13.10.2023**, வெள்ளிக்கிழமை

1. தவசியே கலியினில் கிடைத்த
   தனிப்பெருங் கருணை வடிவான
   அவதார ஆறுமுக ஞானியே
   அண்ணலே உன் பெருமைகூறி
2. கூறியே சோபகிருது தரிவை திங்கள்
   குறைவிலா இருபானாற்திகதி புகர்வாரம்
   (சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 26 ம் நாள், 13.10.2023, வெள்ளிக்கிழமை)
   தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
   தேசிகன் கேட்க கோச்செங்கட் சோழ நாயனார்யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
   உண்மை நெறிகாட்டும் ஞானி
   ஞான மார்க்கமே பேருலகில்
   நன்மைகள் செய்யக் கூடும்
4. கூடவே தரும ஞானமிக்க
   குறைவிலா மக்கள் படைகளை
   நாடெங்கிலும் பெருக்கியே
   ஞான உலகம் படைக்க நேரும்
5. நேருமை கொண்ட அதிகார
   நீதிநிறைந்த தலைமைதனை
   வருங்காலம் உருவாக்கியே
   வரலாற்றை மாற்ற நேரும்
6. நேரும் வறுமை என்பதில்லா
   நிலவுலகம் வளம் மிகுந்த
   மாறும் பசுமை லோகமாக
   மக்களும் பேதம் கருதா வண்ணம்

7. வண்ணமுடன் சகோதரத்துவம்பட
வாழ்க்கைதரம் உயர்த்த நேரும்
எண்ணம் எல்லாம் சுயநலமின்றி
எல்லாம் சமம் பொதுநலமுடன் வாழ
8. வாழ அறிவுத் தெளிவும்
வள்ளல் தன்மையும் கூடும்
காலமெல்லாம் வேலவன் மேல்
கட்டாய வழிபாடுதனை செய்து
9. செய்துமே ஞானத்தலைவனை
சிந்தையில் ஏற்றி பூஜித்து
மெய்ஞானம் கண்டுத் தேறி
மேலவர்களாக மாறக் கூடும்
10. கூடுமே எங்கும் எதிலும்
குருபரன் செயல்வடிவேயென
நாடும் சகல மன ஓட்டமாக
நம்பிக்கை அளவிலா கூடி
11. கூடியே ஞான வாழ்வாக
குருபரன் தேடிய ஞானியாக
தடையற உலகோர் தேற நேரும்
தரணிக்கு நல்லாட்சித்தரக் கூடும்
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—